# கழகத் தலைவர் அவர்களுடன் – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (5.5.2026), காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளான ம.தி.மு.க. – வி.சி.க. சி.பி.எம். சி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தே.மு.தி.க. கட்சிப் பொருளாளர், வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 'ஆம்ஆத்மி' கட்சியின் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.ரகுபதி வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்று கொண்டார்.



ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற சிவ.வீ.மெய்யநாதன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்று கொண்டார்.



கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி வேட்பாளர் கே.கே.நித்தியானந்தம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றார். உடன் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற டாக்டர் வை.முத்துராஜா வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்று கொண்டார்.